O.S. : 39/2018

DW. 1 : விஜில் குமார்

Date :05.03.2026

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதியை எனக்கு தெரியும் என்றால் சரிதான். களியக்காவிளை கிராம் ரீ சர்வே எண். 390/9 ல் 4.188 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் ஒரு கட்டிடமும் உள்ளது என்றால் சரிதான்., 18.04.2016 ல் வாதிக்கு தாவா சொத்தை கிரயம் கொடுப்பதாக கூறி 6,00,000/– முன்பணமாக வாங்கினேன் என்றால் சரியல்ல நான் அது சம்மந்தமாக ஒரு கிரய ஒப்பந்தத்தை நான்ஏற்படுத்தி கொடுத்தேன் என்றால் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும வா.சா.ஆ. 1 நான் வாதிக்கு பிறப்பித்துக் கொடுத்த கிரய ஒப்பந்தம் என்றால் சரிதான் அதில் எனது மனைவி சாட்சி கையொப்பம் சய்துள்ளார் என்றால் சரிதான்– பணம் வாங்கும் போது ஒப்பந்தம் எழுதும் போது எனதுமனைவி உடன்இருந்தார் என்றால் சரிதான்– ஒப்பந்தத்தி' கிரய ஆவணம் முடிப்பதற்கு இரண்டு வருட கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு கால வருட அவகாசத்தில் வாதி என்னை நேரில் சந்தித்து சொதசை கிரயம் எபதிக் கொடுக்குமாறு கேட்டார் என்றால் சரிதான். நான் ஒவ்வாரு முறையும் காலம் கடத்தி செனனேற் என்றால் சரியல்ல. வாதி தான் எழுதிக் கொடுத்த ஆவணத்தை காட்டவில்லை. 24. 11. 2017 ல் வாதி சொத்தை கிரயம் முடித்து கொடுக்குமாறு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் அதை பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். நான் அறிவிப்பை பெற்ற பின் நான் சொத்தை கிரயம் கொடுத்தேனா என்றால் இல்லை. சிறிது காலம் கழிந்து எழுதிக் கொடுப்பதாக சொன்னேனா என்றால் இல்லை. 2014 வருடம் ஒரு கிரய ஒப்பந்தம் போட்டுக கொண்டதாக ஆவணம் பி,வசா.ஆ. 1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாபன் அந்த நானும் வாதியும் சேர்ந்து 2016 ல் ரத்து செய்தோம் என்றால் சரிதான். அந்த ரத்து ஆவணத்தில் தற்போது சொத்தை கிரயம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் மேற்படி ஒப்பந்தம் ரத்து செய்வதாக அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் விருப்பத்தின் பெயரில் நான் அந்த ஆவணத்தை ரத்து செய்தேன் என்றால் சரிதான். வாதி வட்டி தொழில் செய்வதாக நான் எனது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றும் அந்த விபரம் எனக்கு தெரியுமா

என்றால் தெரியாது. நான் வாதிக்கு மாதம் 15,000/- வட்டி செலுத்தி வந்ததை காட்ட ரசீது எதவாது தக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரய ஒப்பந்தம் நான் எழுதும் போது காரோடு தேசத்தில் , மாஞ்சான் குழி என்ற இடத்தில் லெபனோ காட்டேஜ் என்ற விலாசத்தில் குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு பட்டிகை சொத்தில் குடியிருந்தது இல்லை என்றால் சரிதான்- ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள முகவரிக்கு தான் வாதி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் 6,00,000/- முன் பணம் வாங்கவில்லை என சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. என்னை கட்டாயப்படுத்தி ஆவணம் எழுதி வாங்கியது சம்மந்தாக வாதி மீது எதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் செய்துக் கொண்ட கிரய ஒப்பந்தப்படி நான் வாதிக்கு கிரய அவணம் எழுதிக் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியை ஏமாற்றும் நோக்கத்தோடு உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நான் எனது எதிர் வழக்குரை முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விபரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**